12.04.2018

O.S.No.22/2012

DW-1 Irudhaya Mary

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு பிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணைக்கு அனுமதிக்கப்படுகிறார்.**

**குறுக்கு விசாரணை**

**2 முதல் 5 பிரதிவாதிகள் என் மகன்கள். என் கணவர் பெயர் சவுரியப்ப ரெட்டியார். நாங்கள் கிருஸ்தவ மதத்தை சார்ந்தவர்கள். திருமணம், ஞானஸ்நானம் சர்ச்சில் தான் நடந்தது. வழக்கு சொத்துக்கள் 84 சென்ட் என் கணவருக்கு பாத்தியப்பட்டது. வாதிக்கு 5வது பிரதிவாதி தவிர மற்ற அனைவரும் ஒரு கிரைய ஒப்பந்தம் எழுதிக்கொடுத்தோம். 5வது பிரதிவாதியின் கையெழுத்து பிறகு வாங்கி தருவதாக அதில எழுதப்பட்டுள்ளது. அதை நாங்கள் சொல்லவில்லை. வழக்கிற்கு முன்பாக அரிஸ்டாட்டில் என்ற வழக்கறிஞரை வைத்து அறிவிப்பு எதுவும் கொடுக்கவில்லை. அறிவிப்பு கொடுக்கவில்லை என்பதை எதிர் வழக்குரையில் சொல்லவில்லை. 1988ம் ஆண்டு என் கணவர் அடமானம் பத்திரம் எழுதியது தெரியாது. 1998 ஆம் ஆண்டு கடனை அடைப்பதற்கு காலி மனையை பட்டாபிராமன் என்பவருக்கு நான் கிரையம் கொடுத்தது தெரியாது. 1997- ல் என் கணவரும் என் மகன்களும் சேர்ந்து ஒரு கிரையம் கொடுத்தது தெரியாது. சுஜாதா என்பவருக்கு நானும் 5வது பிரதிவாதி தவிர மற்ற மகன்களும் கிரையம் கொடுத்தது தெரியாது. 2004ல் பால்ராஜ் என்பவருக்கு நான் கிரையம் கொடுத்ததாக சொன்னால் சரியல்ல. சங்கர் என்பவருக்கு பால்ராஜ் ஒப்பந்தம் எதுவும் போடவில்லை. 2011 ல் பி2 மூலம் அது ரத்து செய்யப்பட்டது தெரியாது. சங்கருக்கு எதற்காக ஒப்பந்தம் போட்டார்கள் என்பது தெரியாது. இவ்வழக்கு கிரைய ஒப்பந்தத்தில் 1.5 லட்சம் பணம் வாங்கினேன். அந்தப் பணத்தை கொடுக்க சென்ற போது வாதி என்னை அடித்து விட்டார். நான் வழக்கு விவரங்களை சொல்லிதான் பதில் அறிவிப்பும் பதில் உரையும் போடப்பட்டது. தேவசகாயம் பாகம் கேட்டு ஓ.எஸ். 411/2011 வழக்கு தாக்கல் செய்தார். அந்த**

WEB COPY

வழக்கில் தேவசகாயத்திற்கு ஆறில் ஒரு பங்கு இருப்பதாக தீர்ப்பானது தெரியாது. வாதியை இந்த வழக்கில் விசாரித்தது தெரியாது. நீதிமன்றத்திற்கு என் மகன் பால்ராஜ் வந்திருக்கிறார். மற்ற மகன்களுக்கு வழக்கு நடப்பது தெரியும். பி4 ஆவணத்தில் யார் அடித்தார்கள் என்பது குறிப்பிடவில்லை. பி3 இந்த வழக்கிற்கு பின்னால் போடப்பட்டது. அதில் சார்லஸ் பேரில் புகார் கொடுக்கப்பட்டுள்ளது. அப்புகாரில் சமாதானம் செய்து அனுப்பி விட்டார்கள். போலிசார் எங்கள் வீட்டிற்கு வந்தார்கள். என் மருமகள் சம்பவம் எதுவும் நடக்கவில்லை என்று சொன்னதால் பி3 புகாரின் பேரில் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல. வாதி என்னுடைய சொத்திற்கு அருகிலேயே இடம் வாங்கியிருப்பது தெரியாது. வாதியிடம் நான் கடன் வாங்கினேன் என்ற விவரத்தை அறிவிப்பிலோ பதிலுரையிலோ சொல்லவில்லை. வாதியிடம் வாங்கிய 1.5 லட்சம் ரூபாயை இந்த கோர்ட்டில் டெபாசிட் செய்யவில்லை. பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியாது. செண்டுக்கு 16000 ரூபாய் என்று தான் ஒப்பந்தத்தில் உள்ளது. என் மகன்கள் படித்தவர்கள். அவர்களுக்கு விவரங்கள் எதுவும் தெரியாது. அவர்கள் வழக்கறிஞரிடம் போகவில்லை. தேவசகாயம் பங்கு போக மீதி சொத்தை நாங்கள் கிரைய கொடுக்க வேண்டும் என்று சொன்னால் சரியல்ல. பால்ராஜ் கடன் வாங்கிய விவரம் எனக்கு தெரியாது. பதில் அறிவிப்பிலும் பதிலுரையிலும் சொல்லாத விவரங்களை பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியிருக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கு தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

WEB COPY